இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அக்காலத்தில் மானிடமகன் வருகையைப்பற்றி இயேசு தம் சீடர்களுக்குக் கூறியது: “கவனமாயிருங்கள், விழிப்பாயிருங்கள். ஏனெனில் அந்நேரம் எப்போது வரும் என உங்களுக்குத் தெரியாது. நெடும் பயணம் செல்ல இருக்கும் ஒருவர் தம் வீட்டை விட்டு வெளியேறும்போது தம் பணியாளர் ஒவ்வொருவரையும் அவரவர் பணிக்குப் பொறுப்பாளராக்கி, விழிப்பாய் இருக்கும்படி வாயில் காவலருக்குக் கட்டளையிடுவார். (மாற்கு 13: 33-35)

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயரின் திருவருகைக் காலத்திற்கான சிறப்பு செய்தி

## திருவருகை காலம்- எதிர்நோக்கு, அன்பு மற்றும் இரக்கத்தின் காலம்

கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வின் வருகையை மிக்க நம்பிக்கையுடனும் தயாரிப்புடனும் எதிர்கொள்ள திருவருகை காலத்தில் அடியெடுத்து வைக்கும் வேளையில் நமது மீட்பரின் திருப்பெயரில் அன்போடும் ஆசீரோடும் உங்களை வாழ்த்துகிறேன்.

இந்த புனித காலத்தில், கிறிஸ்து உலகிற்கு கொண்டு வந்த அன்பு, இரக்கம் மற்றும் நீதியின் ஆழமான செய்தியைத் தியானிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். திருவருகை காலம் என்பது ஆன்மீக புதுப்பித்தலின் காலம். நமது நம்பிக்கையை மறுவுறுதி செய்து, நமது விண்ணகத் தந்தையின் ஆழ்ந்த இரக்கத்திற்கும் அன்பிற்கும் நம் இதயங்களை மீண்டும் திறப்பதற்கான காலமாகும்.

நம் இறைவனின் பிறப்பை ஆவலுடன் எதிர்பார்க்கும் நாம், நம் மத்தியில் மிகவும் தேவையில் இருப்பவர்களை, குறிப்பாக வறுமை மற்றும் துன்பங்களில் தவிக்கும் சகோதர சகோதரிகளை நினைவுகூர்வோம். திருவருகை காலம், தாராள மனப்பான்மை மற்றும் இரக்கத்தின் உணர்வை நம்மில் உருவாக்கி நமது சமூகங்களில் ஒதுக்கப் பட்ட, பாதிக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப் பட்டவர்களை அணுகிச் செல்ல அழைப்பு விடுக்கிறது.

மேலும், நமது மகிழ்ச்சியான எதிர்பார்ப் புக்கு மத்தியில், பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரயேலில் நடைபெறும் போரினால் துன்புறும் அனைவருடனும் ஒன்றித்திருக்க வேண்டிய நமது கடமையை மறந்துவிடக் கூடாது. போரின் மத்தியில் சிக்கித் தவிக்கும் அப்பாவி பொதுமக்கள் எதிர்கொள்ளும் துயரங்களையும் அழிவு களையும் பார்க்கும்போது மனவேதனை யாக இருக்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்று பவர்களாக, நாம் அமைதியின் தூதுவர் களாக, நீதிக்காகக் குரல் கொடுக்கொடுக்க அழைக்கப்பட்டுள்ளோம். போரினால் கொந்தளிப்பு நிறைந்த வட்டாரங்ளிலும், உலகின் பிற பகுதிகளிலும் அமைதி நிலவ வேண்டும் என்று மனப்பூர்வமாக மன்றாடுவதோடு, பாதிக்கப்பட்டவர் களுக்கு நமது ஆதரவை வழங்குவோம்.

திருவருகை கால வளையத்தில் நாம் ஏற்றும் மெழுகுத்திரி ஒவ்வொன்றும் நம்பிக்கை, அமைதி, மகிழ்ச்சி மற்றும் அன்பைக் குறிக்கிறது. இந்த திருவருகை காலத்தில், நாம் பயணிக்கும்போது இந்த நற்பண்புகள் நமது செயல்களையும் அணுகுமுறைகளையும் வழிநடத்தட்டும்.

அன்பு மற்றும் இரக்கத்தின் மக்களாக நம்மைத் தூண்டி, நம்பிக்கையின் ஒளியை நம் சமூகத்தின் ஒவ்வொரு மூலையிலும்



பேராயர் ஜூலியன் லியாவ்

கொண்டு செல்ல கிறிஸ்துவின் ஒளி நம் இதயங்களில் ஒளிரட்டும்.

நமது கூட்டு முயற்சியின் மூலம், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலையும், துன்பங்களுக்கு நிவாரணத்தையும், கலவரம் மிகுந்த நாடுகளுக்கு அமைதியையும் கொண்டு வர இறைவனின் அருளையும் வழிகாட்டுதலையும் நாடி, இறைவேண் டலில் ஒன்றிப்போம்.

இந்த திருவருகை காலத்தில், அமைதியின் ஆண்டவருக்கு நம் இதயங்களைத் திறப் போம், அவருடைய உடனிருப்பு நம் வாழ்க்கையையும் நம் உலகத்தையும் மாற்றும்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக் கும் ஆன்மீக ரீதியில் செழுமை சேர்க்கும் திருவருகைக்கால ஆசீரை வழங்கி வாழ்த்துகிறேன்.

*அமைதியை அருளும் ஆண்டவர்தாமே*
*எப்பொழுதும் எல்லா வகையிலும்*
*உங்களுக்கு அமைதி அளிப்பாராக!*
*ஆண்டவர் உங்கள் அனைவரோடும்*
*இருப்பாராக! ( 1 தெச 3:16)*

*+ பேராயர் ஜூலியன் லியாவ் பெங் கிம்,*
*கோலாலம்பூர் மாமறைமாவட்டம்*

# பேர்மாத்தாங் திங்கி & பட்டர்வெர்த் பங்குகளில் அருளடையாள முகாம் நடைபெற்றது

பினாங்கு: கடந்த 29 அக்டோபர் 2023 (ஞாயிறு) காலை 9.00மணி முதல் மதியம் 5.30 மணி வரை புனித கன்னி மரியாள் பிறப்பு தேவாலயம், பட்டவெர்த்தில் "முதல் தூய நற்கருணை அருட்சாதனம்" மற்றும் "உறுதிப்பூசுதல் அருட்சாதனம் "பெறவிருக்கும் மாணர்வர்களுக்காக ஒரு நாள் முகாம் நடந்தேரியது. இம்முறை இம்முகாம் பட்டவெர்த் பங்குடன் இணைந்து நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



இம்முகாமில் 13 மாணவர்கள் முதல் தூய நற்கருணை அருட்சாதனம் பெருபவர்களாகவும் 9 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் பெறுபவர்களாகவும் பங்கேற்றனர். முதல் அமர்வானது, " நாம் ஏன் கத்தோலிக்கராக இருக்கிறோம்" மற்றும் இரண்டாம் அமர்வில் "நான் எவ்வாறு கத்தோலிக்கராக வாழ்கிறேன்" என்ற தலைப்புகளில் இரண்டு அமர்வுகள் இடம்பெற்றன. அவ்வமர்வுகளை அருட் சகோதரி ஜெசிக்கா (LSP), மற்றும் மறைப்பணியாளர்கள், சகோதரி எலிஸ் சகோதரி யோஸ்சிலா, சகோதரர் அந்தோனி பிரான்சிஸ் மற்றும் பயிற்சியாளர் சகோதரர் ஆரோக்கிய டாஸ் அவர்களால் வழிநடத் தப்பட்டது.

இவர்களுக்கு விவிலியக் கேள்வி பதில் அங்கமும் விளையாட்டு வடிவில் நடத்தப்பட்டது. மாணவர்களின் பெற்றோர் கலந்துரையாடலும் இடம் பெற்றது. மற்றும் மாணவர்களுக்கு திருப்பலியில் பயன்படுத்தப்படும் நற்கருணை புனிதப் பொருட்களும் அதன் விளக்கமும் அளிக்கப்பட்டது. எதிர்வரும் 26 நவம்பர் 2023 (ஞாயிறு)



முதல் தூய நற்கருணை அருட்சாதனம் பெறுவர். 3 டிசம்பர் 2023 பட்டவெர்த் பங்கிலும், மற்றும் டிசம்பர் 2023, பெர்மாத்தாங் திங்கி பங்கிலும் உறுதிப் பூசுதல் அருட்சாதனமும் பெறுவர்.

மேற்கண்ட முகாமின் வெற்றிக்கு முழு ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்களுக் கும் பங்குத் தந்தையர்களுக்கும் ஏற்பாட்டுக்குழுவினர் நன்றி தெரிவித் துக் கொண்டனர்.

*சகோ.ஷீலா , மரியாளின் தூய பெயர் தேவாலயம், பெர்மாத்தாங் திங்கி*

# 2025 யூபிலி ஆண்டு

யூபிலி கி.பி. 2025
எதிர்நோக்கின் திருப்பயணிகள்

‘நம்பிக்கையின் திருப்பயணிகள்’ என்ற தலைப்பில் 2025 ஆம் ஆண்டு கத்தோலிக்க திரு அவை ஜூபிலி ஆண்டை கொண்டாட இருக்கிறது.

# கோலாசிலங்கூர் சிற்றாலயத்தில் புதிய குருவின் முதல் திருப்பலி..

**கோலாசிலாங்கூர்:** கடந்த 13 நவம்பர் 2023 அன்று பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால் அருள்பணியாளராக அருள்பொழிவுப் பெற்ற அருள்பணி ஞான செல்வம் பிரான்சிஸ் அவர்கள் தமது முதல் திருப்பலியை இங்குள்ள குழந்தை இயேசு சிற்றாலயத்தில் கொண்டாடினார்.



பெஸ்தாரி ஜெயா புனித வனத்து சின்னப்பர் பங்கின் மண்ணின் மைந்தரான இவர் தமது குருத்துவப் பணியை இனிதே துவங்கினார். குழந்தை இயேசுவின் ஆலயத்தில்தான் தாம் ஓர் அருள்பணியாளர் ஆக வேண்டும் என்பதற்கான அழைப்ப



*அருள்பணி எட்வின் பீட்டர் மற்றும் அருள்பணி ஞான செல்வம் பிரான்சிஸ்*

உணர்ந்ததாக தமது மறையுரையில் கூறினார். இச்சிற்றாலயத்திற்கு வரும் போதெல்லாம் தமக்கு புத்துணர்ச்சியும் உந்துதலும் கிடைக்கப் பெற்றதாக நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

இத்திருப்பலியில் முன்னால் பங்குத் தந்தை மறைத்திரு எட்வின் பவுல் அவர்களும் புதியக் குருவானவருடன் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினார்.

பங்கு மக்கள் திரளானோர் கலந்துக் கொண்ட இவ்விழாவில் சிறுவர்கள் குருவானவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.திருப்பலிக்கு முன்னர் ஆரத்தியும் எடுக்கப்பட்டது. திருப்பலிக்குப் பிறகு அனைவருக்கும் காலை சிற்றுண்டி வழங்கப் பட்டது.

*-அந்தோணி மாசிலாமணி, கோலசிலாங்கூர்*

# மோதல்களில் குழந்தைகள் தங்கள் உயிரையே விலையாக கொடுக்கிறார்கள்

வத்திக்கான்: காசாவில் உள்ள பத்து இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகளின் மீது ஏற்பட்டுள்ள தாக்கம்



ஒரு பிரமிடு போன்றது, இப்பிரமிடின் மேற்பகுதி, காஸாவின் கலவரத்தில் இடிபாடுகளுக்கு அடியில் குறைந்தது 5,000 குழந்தைகள் கொல்லப்பட்டது, அல்லது காணாமல் போனது என, தங்கள் உயிரை இழந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு கீழே தங்கள் வீடுகளிலிருந்து கட்டாயப்படுத்தப்பட்டு, குறிப்பாக சிறு குழந்தைகளுக்கு முற்றிலும் பொருந்தாத தங்குமிடங்களில், இடம் பெயர்ந்து தண்ணீர், உணவு மற்றும் பாதுகாப்பு வசதியின்றி அதிக எண்ணிக்கையில் உள்ளவர்களை குறிப்பதாகவும், அவர்களுக்கு கீழே போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த குழந்தை களையும் குறிப்பதாகவும்,

மேலும், வாழ்வில் முன்னோக்கி செல்லும்போது இந்த மோதலின் வடுக்கள் மற்றும் மனரீதியான பாதிப்புகளை அவர்களுடன் சுமந்து செல்வார்கள் என்றும் குழந்தைகளை காப்பாற்றுவதற்கான பிரிவின் தலைவரான ஜேம்ஸ் டென்ஸ்லோ கவலையுடன் விவரித்துள்ளார்.

போரிடும் தரப்புகளின் முன்னுரிமை இந்த குழந்தைகளின் உரிமைக்காக இல்லை என்பது தெளிவாகிறது என்று கூறியதுடன், இந்த சூழ்நிலையில் இம்மக்களுக்கு உதவ என்ன செய்ய முடியும் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், தற்போதைய தேவையுடன் ஒப்பிடும்போது இப்போது செய்யப்படுவது மிகவும் குறைவு என்று தெரிவித்துள்ளார் ஜேம்ஸ் டென்செலோ.

திமினா செலின் இராஜேந்திரன் - வத்திக்கான்

## மந்தின் பங்கு, புனித அலோசியுஸ் கொன்சாகாவின் திருப்பண்டத்தைப் பெற்றது

நெகிரி செம்பிலான், மந்தின் நகரில் உள்ள பங்கு மக்கள் பங்கின் பாதுகாவலரான புனித ஆலோசியுஸ் கொன்சாகாவின் திருப்பண்னத்தைப் பெற்றனர். பங்குத் தந்தை அருள்பணி கிறிஸ்தபர் சூசை பிள்ளை அவர்கள் மிகவும் மதிப்புடன் திருப்பலியின்போது இறைமக்களுக்கு அதனை வெளிப்படுத்தினார்.

இந்த ஆலயம் எழுப்பப்பட்டு 1 2 3 ஆண்டுகளும், புனித அலோசியுஸ் இறந்து 432 ஆண்டுகளும் கடந்த நிலையில் அவரது




எலும்புத் துண்டின் ஒரு பகுதியாக இந்த திருப்பண்டம் ஆலயத்தை வந்தடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## திருவருகைக் காலம்

**திருவருகைக் காலம் இரண்டு பண்புகளைக் கொண்டது.**
**முதலாவது, இயேசு இவ்வுலகில் முதல் முறையாக வந்த நிகழ்வைக் கொண்டாட மக்களைத் தயாரிக்கிறது. இரண்டாவது வரவிருக்கும் இயேசுவின் இரண்டாம் வருகையையும் ஆவலுடன் எதிர்பார்க்க மக்களைத் தூண்டுகிறது. .**



# வருவேன் என்றவர் வருவார், எதிர்ப்பார்த்திருப்போம்!

திருவருகைக் காலம் முதலாம் ஞாயிறான இன்று நாம் படிக்கக்கேட்கும் வாசகங்கள் தரும் சிந்தனை “கவனமாயிருங்கள், விழிப்பாயிருங்கள், ஏனெனில் அந்நேரம் (மானிட மகனது வருகை) எப்போது வரும் என யாருக்கும் தெரியாது” என்பதாகும். மானிடமகனது வருகைக்காக நாம் எந்தெந்த வழிகளில் தயார் செய்யவேண்டும் என்பதை இறைவாக்கினர் எசாயாப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகமானது நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

இஸ்ரயேல் மக்கள் தாங்கள் செய்த குற்றங்களை கடவுள் முன் ஏற்று பாவ மன்னிப்பு கேட்கிறார்கள். ஆண்டவரே நீரே எங்கள் தந்தை: நாங்கள் களிமண், நீர் எங்கள் குயவன்: நாங்கள் அனைவரும் உம் கைவேலைப்பாடுகளே, எங்கள் பாவங்களிலிருந்து எம்மை விடுவித்து, புனித பாதையில் வழி நடக்க வரம் தாரும் என்று மன்றாடுகிறார்கள்.

திருவருகைக் காலம் என்று சொன்னாலே அது ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக நாம் நம்மையே தகுந்த விதத்தில் தயார்செய்ய அழைக்கப்படும் ஒரு காலமாகும். மானிடமகனது வருகைக்காக முதலாவது நாம் செய்யவேண்டிய காரியம்: நேர்மையுடன் வாழ்வதாகும். எசாயா இறைவாக்கினர் அதைத்தான், “மகிழ்ச்சியுடன் நேர்மையைக் கடைப்பிடிப்போருக்கும், உம்மையும் உம் வழிகளையும் நினைவில் கொள்வோருக்கும் நீர் துணைசெய்ய வருகின்றீர்” என்று குறிப்பிடுகின்றார்.

இன்னறய இரண்டாம் வாசகத்தில் இயேசுவைப் பற்றி அறிக்கையிடும் அனைவருக்கும் அவரின் அன்பும், ஆசீரும், அருளும், அமைதியும் உரித்தாகும் என்று புனித பவுல் கூறுகிறார். நம் குறைகளைக் களைந்து இறைமகன் இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழ்ந்திடுவோம் எஃன்று அறிவுறுத்துகிறார்.

நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு மானிட மகனது வருகையைக் குறித்துப் பேசும்போது அது எந்நேரம் வரும்/நிகழும் என யாருக்கும் தெரியாது என்று சொல்கிறார். ஆகையால் நாம் மானிட மகனது வருகை எப்போது வேண்டுமானாலும் நிகழலாம், ஏன் இப்போதுகூட நிகழலாம் என்ற முழு கவனத்தோடு வாழ அழைக்கப்படுகின்றோம். நாம் நம்முடைய வாழ்க்கையை கவனத்தோடும் கடவுளுக்கு உகந்ததாகவும் அமைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இன்றைய இரண்டாம் வாசகத்தில் படிப்பதுபோல நம்முடைய கடவுள் நம்பிக்கைக்கு உரியவர், அவர் சொன்னது போன்றே வருவார்.

மேலும் இறுதிவரை நம்மை உறுதிப்படுத்துவதற்காக கடவுளின் மகனும் ஆண்டவருமான இயேசுகிறிஸ்துவின் நட்புறவில் பங்கு கொள்ள நம்மை மீண்டும் அழைக்கிறார். இயேசுவே உம் திருமிகு ஒளியைக் காட்டியருளும், உமது பேராற்றலால் எங்களை மீட்டருளும் என்று மன்றாடுவோம். விழிப்புணர்வுடன் என்றும் நாம் கடவுளை வரவேற்கத் தயாராகுவோம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

**திருவருகைக்காலம் முதல் வாரம் - ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசா. 63:16b-17; 64:1,3b-8 |
| தி.பா | 80: 1ac,2b. 14-15. 17-18 |
| 2-ம் வாசகம் | 1 கொரி 1: 3-9 |
| நற்செய்தி | மாற்கு 13: 33-37 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**